சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 07.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 47/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-10 |
| சாட்சியின் பெயர் | : | அருண்பிரகாஷ் |
| தந்தை பெயர் | : | இளங்கோவன் |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | உதவி அறுவைசிகிச்சை நிபுனர் |
| வயது | : | 36 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். 3 ம் எதிரி வேறு வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளார் அவர் PT Warrant-ல் ஆஜர் படுத்தப்பட்டள்ளார். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது மதுரையில் உள்ள ராஜாஜி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி

மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கடந்த 06.08.2022 ஆம் தேதி மாலை 5.30 மணியளவில் ராமசாமி என்பவர் மகன் சுமார் 52 வயது உள்ள அ.சா-1 ரவி என்பவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்தார். அவருக்கு சிகிச்சை வழங்கும் பொருட்டு பார்த்தேன். அ.சா-1 ரவிக்கு தலையில் இருந்த காயத்திற்கு CT ஸ்கேன் எடுக்க பரிந்துறை செய்தேன். அதன் பேரில் CT ஸ்கேன் எடுக்கப்பட்டது. அந்த ஸ்கேனை நான் பார்வையிட்டதில் அவருக்கு உட்புறமாக எலும்பு முறிவு எதுவும் இல்லை என தெரிய வந்தது. இதன் பின்னிட்டு இவருக்கு இருந்த காயம் சாதாரண காயம் என்று போலீசாரிடம் காயச்சான்றிதழ் வழங்கினேன். அது ஏற்கனவே அ.சா.ஆ-4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா-1 க்கு இருந்த காயம் அரிவாள் வெட்டினால் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால், ஏற்பட வாய்ப்பு உண்டு.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

போலீசார் என்னிடம் ஆயுதத்தை காட்டி விசாரணை எதுவும் மேற்கொண்டார்களா என்றால் இல்லை. அ.சா-1 க்கு தலையில் இருந்த காயம் சாதாரணமாக நடந்து செல்லும் போது நிலை தடுமாறி சுவரிலோ அல்லது கட்டையில் மோதினால் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.11.07 17:12:12 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.